**R4831**

# JEHOVAH'S SUFFERING SERVANT
# யேகோவாவின் துன்புறும் தாசன்

ஏசாயா 52:13 – 53:1-12

" யேகோவா நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்." ஏசாயா 53:6

இறுதியில் மகிமையின் மாபெரும் மேசியாவாக இருக்கும்படி வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற ஒருவர் மேல் வரும் என்று தேவனால் முன் நியமிக்கப்படட அனுபவங்களின் தெய்வீக சித்திரமாக இந்த பாடம் இருக்கிறது. அவர் இஸ்ராயேல் ஜாதியை உயர்த்தி அதன் மூலம் பூமியின் வம்சங்கள் அனைத்தின் மேலும் ஆசீர்வாதங்களை ஊற்றுவார். "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த பாடத்தின் அநேக தீர்க்கதரிசனங்கள் முன்னரே நிறைவேறியிருக்கின்றன. ஆனால் எல்லாம் அல்ல. மகிமையான காரியங்கள் இன்னும் வரவேண்டியிருக்கிறது. அது அருகில், இன்னும் வாசலருகே இருக்கிறது என்று நாம் நம்புகிறோம்.

இந்த தீர்க்கதரிசனங்கள் ஏறக்குறைய கி.மு. எழுநூறில் எழுதப்பட்டன. இயேசுவின் சொந்த அனுபவத்தில் அவைகள் விசேஷமாக நிறைவேறின. ஒரு சிறிய அளவான ஒரு "சிறுமந்தை" இயேசுவின் அடியார்கள் அவரது அடிச்சுவட்டில் இந்த யுகத்தின் பத்தொன்பது நூற்றாண்டுகளாக (இப்போழுது இருபது நூற்றாண்டு) நடந்திருக்கிறதை மறந்துவிடக்கூடாது. அவர்கள் அவரை நல்ல அறிக்கையோடும் தீமையான அறிக்கையோடும் பின்பற்றியிருக்கிறார்கள்; அவரோடு பாடுபட்டிருக்கிறார்கள்; அவரை நிந்தித்தவர்களின் நிந்தனை அவர்கள் மேல் விழுந்தது. மகிமையான நேரம், ராஜ்யத்தின் அதிகாரம் வரும்போது, அவரது நாமத்தில் பங்கு பெற்று அவரது மணவாட்டியாகவும், அவரது சிங்காசனத்திலும் மகிமையிலும் பங்குபெற்று அவர்களது இரட்சகருடன் இருப்பார்கள். "அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற யேகோவா என்பதே." (எரேமியா 23:6; 33:16)

மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபகம் நீண்ட காலம் ஆவதற்கான புரிந்து கொள்ளுதலுக்கான சாவி, சபையானது அவரில் ஒரு பகுதியாக, அவரது சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறார்கள் என்கிற உண்மையில் இருக்கிறது. "தெரிந்து கொள்ளப்பட்ட" வகுப்பில் சிலரை இஸ்ரயேலரிலிருந்தும் மற்றவர்களை சகல கோத்திரங்களிலுமிருந்தும் மேசியாவின் மணவாட்டியாகவும் அவரது ராஜ்யத்தின் பங்குதாரராகவும் கூட்டிச் சேர்ப்பது தெய்வீக நோக்கமாக இருக்கவில்லையா? அவரது மரணம் உறுதியளிக்கிற மகிமையான ஆசீர்வாதங்கள் ஊற்றப்படுவதற்கும் இயேசுவின் பாடுகளுக்கும் இடையே காலதாமதம் தேவைப்படாது.

தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது, பேர் சபையிலிருந்து அதன் முறைகளில் குறிப்பிட்டுள்ளது போல முற்றிலும் வேறானது என்பது மறுபடியும் நினைவு கூரப்படவேண்டும். உண்மையான தேவனுடைய சபையானது, கிறிஸ்துவத்தில் அனைத்து சபை பிரிவுகளிலும் இருக்கிற பரிசுத்தமான சிலரை மட்டுமே உள்ளடக்கியது. "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்." (சங்கீதம் 50:5) இவர்களைக் குறித்து அப்போஸ்தலர் யோவான் எழுதியதாவது: "உலகம் அவரை அறியாதபடியினால் நம்மையும் அறியவில்லை." ஆனால் "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" என்ற உறுதிமொழி வருகிறது. "கிறிஸ்துவின் பாடுகளின்" முடிவில் இந்த சிறுமந்தையின் தெரிந்துகொள்ளுதலும் குணலட்சணம் பூரணப்படுதலும் நிறைவடைந்து, உடனே மகிமை, மேசியாவின் ராஜ்யத்தின் மகிமை வரும்.

## தீர்க்கதரிசனத்தின் சுருக்கம்

நமது தலைப்பு வசனத்தின் முதல் மூன்று வசனங்களில் மேசியாவின் முழு வேலையும், அதன் தயார்படுத்துதல் மாத்திரமல்ல, அதன் ராஜரீக வல்லமையின் வெளிப்பாடும் வைக்கப்பட்டிருக்கிறது. அது விசேஷமாக தலையானவருக்கு பொருந்துகிறதாக, ஆனால் அவரது சரீர அங்கஙளுக்கும் பொருந்துகிறதாக இருக்கிறது. இதன் சரியான மொழிபெயர்ப்பு கீழ்வருமாறு:

"இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார். அவர் உயர்த்தப்பட்டு மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார். மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுப்புத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். அப்படியே, அவர் அநேகம் ஜாதிகள் மேல் தெளிப்பார்; அவர் நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்கு தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள்."

ஆயிரம் வருட அரசாட்சி திடீரென்று உலகத்தில் தோன்றும் பொழுது உலகின் பிரபுக்கள் ஏன் ஆச்சரியப்படுவார்கள் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நியாயமற்ற, ஆதாரமற்ற அறிக்கைகளை தேவனுடைய ஜனங்களிடமிருந்து கூட அவர்கள் கேட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே வரும் போது ஆச்சரியத்தில் மூழ்கடிக்கப்படுவார்கள். மேசியாவின் ராஜ்யம் இருண்ட யுகம் காலப்பகுதியிலேயே ரோம சபையை வெற்றிகொண்டு நிறைவேறிவிட்டது என்று சிலர் அவர்களிடம் கூறியிருக்கிறார்கள். மற்றவர்கள் அவர்களின் மேசியாவின் ராஜ்யம் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது என்றும் பூமியின் பல்வேறு ராஜ்யங்களும் போர்களும் போர் ஆயத்தங்களும் மேசியாவின் ராஜ்யத்தின் பகுதிகள் என்றும கூறியிருக்கிறார்கள்.

இன்னும் மற்றவர்கள் ராஜ்யம் நீதியின் சீர்திருத்ததை கொண்டு வருகிற பரிணாம வளர்ச்சியின் காரியமாக இருக்கும் என்று கூறினார்கள். அது வரும் போது ஒரு பெரிய சமூக புரட்சி தொடரும். அது யாரும் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மகா கெம்பீரமானதாக இருப்பதால் அது அனைவரின் வாயையும் மூடும். கர்த்தர் தீர்க்கதரிசிகளின் மூலம் கூறியது போல, அந்த ராஜ்யம் "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதாக இருக்கும்." (ஆகாய் 2:6,7)

## அவர்களது சீஷர்களால் காணப்பட்டபடி

இயேசுவின் நாளில் அவரது சீஷர்களின் நிலைப்பாட்டில் இருந்து அவர்கள் பார்த்த அவரது அனுபவங்களை ஏசாயா 53:1-6 சித்தரித்துக் காட்டுகிறது. மரணபரியந்தம் அவரது அன்பு மற்றும் பலியைக் குறித்த ஆச்சரியமானவைகளை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எவ்வளவு பேர் கேட்கிற சிந்தையுடன் கேட்டார்கள்; எவ்வளவு பேர் அதை உணர்ந்திருக்கிறார்கள். எவ்வளவு பேர் அவரை, ஆதாமையும் அவரது இனத்தாரையும் பாவம் மற்றும் மரணத்திலிந்து விடுவிக்கிற யேகோவாவின் நீட்டப்பட்ட புயம் என்று கண்டிருப்பார்கள்! சிலர் மட்டுமே, பரிசுத்தமான சிலர் மட்டுமே செய்தியை உண்மையாகவே, மெய்யாகவே நம்புகிறார்கள். ஏனெனில் உண்மையான ஒவ்வொரு விசுவாசியும் வழங்கப்பட்ட இரட்சகரின் புண்ணியத்தை மாத்திரம் ஏற்றுக்கொள்ளாமல், வரக்கூடிய மகிமையிலும் பங்கு பெறும்படியாக, அவர்களுக்கு வழங்கப்பட்ட அவரது பாடுகளையும் ஏற்றுக்கொள்வார்கள். நாம் வாசிக்கிறதாவது:

“எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப் போலவும் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை; சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும் போது நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணபட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடுகள் அனுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற் போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்டைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல் வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். ”

தெய்வீக ஆசீர்வாதம் வருவதற்கு முன்னர் பாவத்திற்கான ஒரு பலி தேவை என்பதை புரிந்து கொள்ளாமல், யுதர்கள் தங்களை ரோமர்களின் நுகத்திலிருந்து விடுவிக்க ஒரு வல்லமையுள்ள நாயகனை, வெற்றிக்கொள்ளும் தளபதியை எதிர்நோக்கினார்கள். இயேசு கனிவான போதகராக, மனதுருக்கமும், சாந்தமும் உடையவராக இருந்து தன் ஜீவனை “ஆடுகளுக்காக” கொடுத்தது அவர்களுக்கு ஏமாற்றத்தை கொடுத்தது. அவர் உண்மையிலேயே பரிசுத்தமும் தேவ பக்தியுமான ஆசீர்வாதங்களை பெற்றிருந்தார். ஆனால் இவை அவர்கள் எதிர்பார்த்த நம்பிக்கையும் கனவும் அல்ல. இயேசுவினால் சகித்துக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் எல்லாம் மற்றவர்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டன. அவரது சீஷர்கள் கூட தவறாக புரிந்துகொண்டனர். அவர்களில் ஒருவர் கூறியதாவது: “இது உமக்கு நேரிடக்கூடாது, இது உமக்கு சம்பவிப்பதில்லை.” அவரது சிலுவை மரணம்; அவர் சிலுவையில் அறையப்படும் போது, அது தெய்வீக அங்கீகாரமின்மைக்கு ஆதாரமாக அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமது தாசனையும் அவரது ஊழியத்தையும் யேகோவா நிராகரித்ததற்கான ரூபகாரம் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## மிகவும் முதிர்ச்சியடைந்த பார்வை

வசனம் ஏழு முதல் ஒன்பது வரை இயேசுவின் சீஷர்களின் முதிர்ச்சியடைந்த பார்வையை சித்தரிக்கின்றன. அவர்கள் தங்கள் ஆண்டவரையும் அவரது வேலையையும் மிகவும் ஜாக்கிரதையாக புரிந்து கொள்ளவும் கவனிக்கவும் ஆரம்பித்தார்கள். தலையானவருக்கு இருந்தது போலவே, சபையும் அவரது சரீரமாகவும் இருந்த அநேக அங்கங்களுக்கும் இருந்தது. அவர்களது மரணத்திற்கு பிறகு தான் தெய்வீக நிலைப்பாட்டில் அவர்களது உண்மையான ஆவி புரிந்து கொள்ளப்பட்டு, உணர்ந்து கொள்ளப்பட்டது.

நாம் வாசிக்கிறதாவது: “அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்; ஆனாலும் தம்முடைய வாயை திறக்கவில்லை; அடிக்கும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும் தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதல்களினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவரது பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை ; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை. ”

குழந்தையில்லாமல், ஒரு குற்றவாளியைப் போல, இயேசு மரிப்பது போல மரிக்கிறவர் மகா மேசியாவாக ஆகும்படி எதிர்பார்க்க முடியுமா? அவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதாவது: “அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு எனப்படும்.” சிலுவையிலறையப்பட்ட இயேசு எப்படி ஒருவனுக்கு ஜீவனைக் கொடுக்க முடியும்?

ஆதாமின் விழுகையினால் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்ட ஆதாமையும் அவரது இனத்தையும் அவர் விலைகொடுத்து வாங்கிய தெய்வீக ஏற்பாட்டை வேத வாக்கியங்கள் விளக்குகின்றன. பரம பிதாவாகிய யேகோவாவினால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட இயேசு இப்பொழுது மகிமையடைந்து அவரது சரீரமாகிய சபையானது நிறைவடைய காத்திருக்கிறார். இஸ்ரயேல் மற்றும் உலகத்தின் மேசியாவாக அவரது மகா அதிகாரத்தையும் ஆளுகையையும் எடுத்துக்கொள்ளுவார். மேசியாவின்

ஆளுகையில் ஆதாமுக்கும் அவரது சந்ததியினருக்கும் உயிர்த்தெழ அல்லது பாவத்திலுமிருந்தும் மரண நிலைமையிலிருந்தும் எழுப்பப்படவும் முழுமையான மானிட பூரணத்திற்கும் நித்திய ஜீவனுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படும். ஆதாமில் இழந்த அனைத்தும் சிலுவை மூலம் மீட்கப்படும். பின்வருகிற வசனத்தில் இது விளக்கப்படுகிறது: "அவர் தம் சந்ததியை காண்பார்." அநேக ஆதாமின் சந்ததியினர் அவருக்கு கீழ்ப்படிந்து, அவர் அவர்களை பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, மானிட பூரணத்தில் அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்.

## தீர்க்கதரிசன விளக்கம்

வசனம் பத்து மற்றும் பதினொன்று, இயேசுவின் அனுபவங்களின் தீர்க்கதரிசன விளக்கத்தை கீழ்க்கண்டவாறு தருகிறது; "யேகோவா அவரை நொறுக்க சித்தமாகி, அவரைப் பாடுகளுக்கு உட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னை குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும் போது அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்; கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தம் ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்துகொள்வார்."

## இரட்சகரின் உயர்த்தப்படுதல்

நமது பாடத்தின் கடைசிவசனம், இயேசு உயிர்த்தெழுதலில் தேவதூதர்கள், துரைத்தனங்கள், வல்லமைகள் மற்றும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக உயர்த்தப்படுதலை குறிக்கிறது. இது அவரது பலியின் உடன்படிக்கையின்படி, பிதாவின் சித்தத்தை செய்வதில் அவரது உண்மைத் தன்மைக்கான பரிசாக இருந்தது. இயேசு இந்த பெரிய பரிசை, "பலமான ஜெயங்கொண்டவர்களாகிய" தமது சபை, தமது மணவாட்டியுடன் பகிர்ந்து கொள்ளுவார் என்று யேகோவாவும் நமக்கு சொல்லுகிறார். கடைசியாக தீர்க்கதரிசி ஆண்டவரின் தற்கால யுகத்தின் வேலையை சுருக்கமாக கூறுகிறார்.

"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தை தாமே சுமந்த அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டனிமித்தம் அநேகரை அவருக்கு பங்காக கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்கு கொள்ளையாக பங்கிட்டுக் கொள்வார்."